**செய்தி வெளியீடு எண் : 684** **நாள்: 28.04.2022**

செய்திவெளியீடு

**பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 132–வது பிறந்த நாள் விழா**

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 132–வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு நாளை (29.04.2022) காலை 9.00 மணியளவில் தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு, மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளார்கள்.

'புரட்சிக் கவிஞர்' பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் கனகசபை முதலியார், இலக்குமி அம்மாள் தம்பதியருக்கு புதுச்சேரியில் 29.04.1891 அன்று மகனாகப் பிறந்தார். அவரது தந்தையின் பெயரின் முதல் பாதியை இணைத்து 'கனகசுப்புரத்தினம்' என்று அழைக்கப்பட்டார். தனது இளம் வயது தொடங்கி தமிழ் மொழி மீது தணியாத தாகமும் பற்றும் கொண்டிருந்தார். 1946 ஆம் ஆண்டு அவரது "அமைதி–ஊமை" என்ற நாடகத்திற்காக அவர் 'தங்கக் கிளி பரிசு' வென்றார். பாரதியாரிடம் நெருங்கிய நட்பு கொண்ட பாரதிதாசன் அவர்கள் அன்று முதல் பாரதியை தனது வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு, பாரதிதாசன் என்ற பெயரிலே அவர் தனது படைப்புகளை வெளியிட்டார். 'பிசிராந்தையார்' நாடகத்திற்காக 1970ஆம் ஆண்டு பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் மறைவிற்குப் பிறகு 'சாகித்ய அகாடமி விருது' வழங்கப்பட்டது.

பாரதிதாசன் ஒரு தமிழாசிரியர், தமிழ்க் கவிஞர், அரசியல்வாதி, திரைக் கதாசிரியர், எழுத்தாளர் என்று பல்வேறு துறைகளில் தமிழ் மொழியின் இனிமையை மக்களிடம் எடுத்துச் சென்றவர் என்று சொன்னால் அது மிகையாகாது. பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 86க்கும் மேற்பட்ட நூல்கள், கதைகள், கட்டுரைகளைப் படைத்துள்ளார்.

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், மங்காத தமிழென்று சங்கே முழங்கு', "தமிழுக்கும் அமுதென்று பேர், அந்த தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்" என்ற தேன் சுவைசொட்டும் பாடல் வரிகளுக்கு சொந்தக்காரர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். தன் படைப்பாற்றல் மூலம் தமிழுக்குப் பல வழிகளில் தொண்டாற்றிய பாரதிதாசன் 1964–ஆம் ஆண்டு ஏப்ரல் 21–ஆம் தேதி இயற்கை எய்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் 1990 ஆம் ஆண்டு பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா தொடக்கமும், நிறைவு விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு, 44 தமிழறிஞர்களுக்கு 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' வழங்கிச்

சிறப்பிக்கப்பட்டது. மேலும், அன்னாருக்கு பெருமை சேர்க்கும் வகையில் 2001 ஆம் ஆண்டு அஞ்சல் தலை வெளியிடப்பட்டுள்ளது.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசனை "தன்மான இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர்" என்றும், பேரறிஞர் அண்ணாவால் 'புரட்சிக் கவிஞர்' என்று போற்றப்பட்டார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 06.05.1990 அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக வளாகத்தில் பாவேந்தர் பாரதிதாசன் சிலையைத் திறந்து வைத்தார்.

02.01.1968 அன்று நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் அன்னாருக்கு பெருமை சேர்க்கும் வகையில் சென்னை மெரினா கடற்கரை சாலையில் 'புரட்சிக் கவிஞர்' பாரதிதாசன் சிலை திறந்து வைக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசின் சார்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர்அலுவலர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

.......

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in